மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,

ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | |
|---|---|
| வழக்கு எண். | .. CC 12/2022 |
| பெயர் | .. வீரபாண்டி(PW2) |
| த/பெ. க/பெ | .. |
| கிராமம் | .. |
| தாலுகா | .. |
| Calling | .. |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969(Central Act 44 of 1969) on the 03rd day of November 2022

**முதல் விசாரணை**

**1.**நான் கே. சண்முகபுரறம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அவரது மனைவி மாலதி மற்றும் மகன் வெள்ளைச்சாமி ஆகியோரைத்தெரியும். 06.02.2022ம் தேதி காலை 8.30 மணிக்கு நான் சண்முகபுரம் பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்தேன். அப்போது தனியார் பேருந்து மேற்கில் இருந்து குளத்துார் செல்வதற்காக வந்தது அது சண்முகபுரம் பஸ்ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்தது .

2.அசா1 கிழக்கில் இருந்து டிவிஎஸ் எக்ஸலில் தனது மனைவி மற்றும் மகனுடன் பஸ்ஸடாப்பின் கீழ்ப்புறம் நின்று கொண்டிருந்தார். அப்போது கிழக்கில் இருந்து வந்த அரசு பேருந்து அதிவேகமாக வந்து நின்று கொண்டிருந்த அ.சா.1 ஓவர் டேக் செய்தபோது அ.சா.1 வாகனத்தின் பின்புறம் இடித்ததில் அ.சா.1 ன் மனைவி

மற்றும் கைக்குழந்தை பேருந்தின் பின் சக்கரத்தில் உள்ளே விழுந்துவிட்டனர். அ.சா.அ1 இடது பக்கமாக விழுந்துவிட்டார்.

3.அ.சா. 1ன் மனைவி மற்றும் கைக்குழந்தை சக்கரத்தில் விழுந்ததில் தலையோடு பேருந்து இழுந்து சென்று விட்டது. அதில் அவர்களது தலை நசுக்கிவிட்டது.அரசு பேருந்து ஓட்டுனர் நின்று கொண்டிருந்த தனியார் பேருந்தில் ஏறிப்போய்விட்டார். மாலா மற்றும் வெள்ளைச்சாமியின் இறப்பிற்கு அரசு பேருந்தின் ஓட்டுனரின் கவனக்குறைவுதான் காரணம். நான் சம்பவத்தின் பரபரப்பில் அரசு பேருந்தை ஓட்டுனரை சரியாக கவனிக்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஓம்) A.ஜெயந்தி
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.